பாராளுமன்ற கூட்டத்தொடர் இல. - 95

நிறுவனத்தின் பெயர் - நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்

குழுஇனங்கண்டுள்ளகுறைபாடு	**குறைபாடுகளைசீராக்கல்செய்துகொள்வதற்குநிறுவனம்மேற்கொண்டுள்ளநடவடிக்கைகள்/ தற்போதையநிலைமை**
01. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு இல்லை என்பது மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூடுட்டம் நடைபெறுவதில்லை என்பது.	நி.பி.133 (ஆ) இற்கமைய திணைக்களத்தின் பணிகளை உள்ளடக்கியதாக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் அண்டில் குழுக் கூட்டங்கள் 02 மற்றும் இந்த ஆண்டில் குழுக் கூட்டங்கள் 04-உம் நடாத்தப்பட்டுள்ளன.
02. UNCRC தரவு முறைமையை பயன்படுத்திக் கொள்ளாமை. மதியுரைக் கட்டணம் உட்பட ரூபா 2,350,000 ஆன செலவினத்தில் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் குழுவுக்கு பருவகால மற்றும் சரியான அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டியதன் அவசியத்தன்மைக்காக 2018 ஆம் ஆண்டு திணைக்களத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டUNCRCதரவு முறைமை பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2023.10.30 திகதிOpen mind Solutions (Pvt) Ltd நிறுவனத்துடன் தரவு முறைமையை தாபிப்பதற்கான (Host)உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு அமைய சமர்ப்பிக்கப்பட வேண்டிய பருவகால அறிக்கையை தயார் செய்யும் போது தகவல்களை சமர்ப்பிக்க வேண்டிய சகல நிறுவனங்களினதும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தரவுகளை தரவேற்றம் செய்வது தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அவ்வவ் நிறுவனங்களினால் தரவுகளை தரவேற்றம் செய்வது தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. UNCRC தரவு முறைமையை தயார் செய்வதற்காக தயாரிக்கப்பட்ட கணினி செயலி மூலம் தரவுகளை தரவேற்றம் செய்யும் போது நிறுவனம் எதிர்கொள்கின்ற நடைமுறைசார் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் பற்றி ஆராய்ந்து குறித்த கணினி செயலி தொடர்பான சிபாரிசுகள் மற்றும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு2024.08.20 திகதி குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது.

	மேற்படி குழு 2024.10.23 ஆம் திகதி ஒன்றுகூடியதுடன், UNCRC தரவு முறைமையை தயார் செய்வதற்காக தயாரிக்கப்பட்ட கணினி செயலியின் குறைபாடுகளை தவிர்த்துக் கொண்டு பயன்படுத்த உகந்தவாறு அதனை மீளத் தயார் செய்வதற்கு எவ்வளவு நிதி செலவாகின்றது? அது நிதிசார் அடிப்படையில் விளைதிறன்மிக்கதா என்பதை முறையான ஆய்வின் மூலம் மேற்கொள்ள வேண்டும் என்பது மற்றும் அதற்கு பல்கலைக் கழக கணினி நிறுவனமொன்றின் ஊடாக ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. எதிர்காலத்தில் இது பற்றிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
03. **<u>அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் 2021 ஆகஸ்ட் 04 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தின் போது வெளியிடப்பட்ட கட்டளைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்.</u>** **கட்டளை இல. 06**-பாதுகாப்பற்ற /அச்சுறுத்தலான நிலையிலுள்ள பிள்ளைகள் பற்றிய தரவுகளைப் பெற்றுக் கொள்வதிலுள்ள பலவீனங்கள் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேச செயலகங்களிலுள்ள அலுவலர்களுக்கு மத்தியில் மாகாண நன்னடத்தை அலுவலர்கள் இல்லை என்பதனால் சிறுவர்களின் சிக்கல்கள் பதிவு செய்யப்படல் மற்றும் முறையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதில் சிக்கல் காணப்படல். <u>அவதானிப்பு/சிபாரிசு/கட்டளை</u> (i)சிறுவர் உரிமைகள் மேம்படுத்தலுக்கு முக்கியமான	• மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் நன்னடத்தை அலுவலர்கள் சேவையாற்றி வருகின்றார்கள் என்பதுடன், அவர்களின் நிலையான சேவை நிலையம் நன்னடத்தை அலுவலகமாகும். எனினும் பிள்ளகள் தொடர்பான சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடுகின்ற குழுக் கட்டமைப்பு சிறுவர் உரிமைகள் பற்றிய பிரதேச, மாவட்ட மற்றும் மாகாணக் குழுக்களுக்கு மேற்படி அலுவலர்களின் பங்கேட்பு மற்றும் பங்களிப்பும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. • பாதுகாப்பற்ற /அச்சுறுத்தலான நிலையிலுள்ள பிள்ளைகளை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இனங்காண்பதற்கு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்/ சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்களினால் பல்வேறு முறையியல்கள் ஊடாக பிரதேச செயலகத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவின் சகல அலுவலர்களினதும் கூட்டு அணுகுமுறையின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. i. சிறுவர்கள் தொடர்பான சிக்கல்களை அறிக்கையிடுவதை தேசிய முறைமையொன்றாக பேணிவருவதற்கு தேசிய சிறுவர்

இந்தத் தரவு முறைமைகளை ஒன்றிணைத்து சிறுவர்களின் சிக்கல்கள் அறிக்கையிடும் தேசிய தரவு முறைமையை பேணிவருவதன் முக்கியத்துவத்தை குழு வலியுறுத்தியது. (ii) குழுவில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய பிரதேச நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் அலுவலர்களுக்கு பாடசாலைக்கு வருகை தராத சிறுவர்கள் மற்றும் சிறுவர்களின் எழுத்தறிவு தொடர்பில் துரிதமாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு மற்றும் அது தொடர்பான தகவல்களை பாடசாலைகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்காக கல்வி அமைச்சுடன் இணைந்து 2016 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய மாகாண மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் தகவல் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டத்தை தயார் செய்தல்.	பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. II. கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 1963/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை கண்காணிப்பு குழுக்களை தாபிப்பதற்கு மாகாண கல்விப் பணிப்பாளரினால் நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்களில் பிரதேச செயலாளரை பிரதிநிதித்துவம் செய்கின்ற சிரேஷ்ட அலுவலர் ஒருவர் குழுவில் அங்கம் வகிக்கின்றார்.பிரதேச செயலாளரினால் பெயரிடப்படுகின்ற அலுவலராக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் / சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளரை பெயரிடுமாறு அறிவித்து பிரதேச செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் குறித்த அலுவலர்களின் பதவிகளை உட்புகுத்துவதற்காக கலந்துரையாடப்பட்ட போதிலும் அதற்கு நீண்டதொரு செயன்முறையை பின்பற்ற வேண்டும் என்று கல்வி அமைச்சு தெரிவித்தது. பாடசாலை செல்லாத சிறுவர்களை பாடசாலைமயப்படுத்துவது கல்வி அமைச்சின் நேரடிப் பொறுப்பொன்றாகும் என்று 2023.09.19 திகதி கல்வி அமைச்சின் அலுவலர்களின் பங்கேட்புடன் நடாத்தப்பட்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைச்சினால் 2023.10.02 திகதிய கடிதம் வெளியிடப்பட்டது. அதற்கமைய

	சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள்/ சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள்,பாடசாலை செல்லாத சிறுவர்களாக இனங்கண்டுள்ள சிறுவர்களை முறைசாரா கல்வி அலுவலர்களிடம் ஆற்றுப்படுத்தல் வேண்டும். அவர்கள் குறித்த சிறுவர்களை பாடசாலைமயப்படுத்தல் மற்றும் அதனைத் தொடர்ந்து தகவல்களை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள்/சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்களிடம் பெற்றுக் கொடுப்பதற்கும் செயற்படல் வேண்டும். அவ்வாறு அறியத்தரப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக இத்திணைக்களத்தின் அலுவலர்கள்பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.
04. **<u>அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் 2021 ஆகஸ்ட் 04 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தின் போது வெளியிடப்பட்ட கட்டளைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்.</u>** **கட்டளை இல. 09**–சட்ட அலுவலர் பதவி வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை.	சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு 2024.07.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வரைவு வர்த்தமானி அறிவித்தல், புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறை மற்றும் விண்ணப்பப்படிவத்திற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அதற்கமைய அடுத்த கட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
05. **<u>அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் 2021 ஆகஸ்ட் 04 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தின் போது வெளியிடப்பட்ட கட்டளைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்.</u>**	நீதி அமைச்சினால் MOJ/L4/563/2023ஆம் இலக்க2024.06.10 ஆம் திகதியைக் கொண்டதாக சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச் சட்டவரைவுக்கு மாகாண ஆணையாளர்களின் சிபாரிசை பெற்றுத் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக சிறுவர் சட்டத்தை திருத்தம் செய்வதற்கும் குழுவொன்று நீதி அமைச்சினால் நியமனம்

கட்டளை இல.10– சிறுவர்கள் தொடர்பாக தத்தெடுத்தல் கட்டளைச் சட்டம் உள்ளிட்ட சட்டங்களை காலத்தின் தேவைக்குப் பொருத்தமானவாறு திருத்தம் செய்யப்படாமை.	செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின்கீழ் தத்தெடுத்தல் சட்டம் மற்றும் சிறுவர் மற்றும் இளைஞர் பற்றிய கட்டளைச் சட்டம் வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதனால் புதிய குழுக்களை பெயரிடுவதன் அவசியத் தன்மைபற்றி நீதி அமைச்சிடம் வினவிநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
06. **<u>அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் 2021 ஆகஸ்ட் 04 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தின் போது வெளியிடப்பட்ட கட்டளைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்.</u>** **கட்டளை இல. 13**– இணையத்தளத்தை பயன்படுத்துவதன் மூலம் சிறுவர்கள் ஆளாகின்ற துர்நடத்தைகளிலிருந்து அவர்களை விடுவித்துக் கொள்ளக்கூடிய முறையியல் ஒன்றை தயார் செய்ய வேண்டியதன் அவசியத்தன்மை.	• நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதுடன், மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின் போது நவீன தொழில்நுட்பத்தை பாதுகாப்பாக பயன்படுத்துவது தொடர்பில் விழிப்புணர்வூட்டுவதும் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினாலும் சைபர் இடைவெளியில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாதல், இணையத்தளப் பயன்பாட்டுக்கு அடிமையாவதை தவிர்த்துக் கொள்ளல் மற்றும் நவீன தொழில்நுட்பத்தை பாதுகாப்பாக பயன்படுத்துவது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. • சைபர் இடைவெளியில் சிறுவர்களை பாதுகாப்பதற்காக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் பல்வேறு நிறுவனங்களின் தலையீட்டைக் கொண்ட செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கப்படுவதுடன் செயற்றிட்டமொன்றும் தயார் செய்யப்பட்டுள்ளது.
07. **<u>அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் 2021 ஆகஸ்ட் 04 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தின்</u>**	• வெகுசன ஊடக அமைச்சினால் பெண்கள் மற்றும் இனரீதியான – சமய ரீதியான சிறுபான்மை மக்களின் கௌரவத்தை பாதுகாப்பது தொடர்பில்

<u>போது வெளியிடப்பட்ட கட்டளைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்.</u> **கட்டளை இல. 14**–சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக ஊடகங்களில் சம்பவங்களை அறிக்கையிடும் போது இடம்பெறுகின்ற முறைகேடுகளை தவிர்த்துக் கொள்வதற்காக சமூகத்துக்கு சாதகமான ஊடக தணிக்கையை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தை தயார் செய்வதன் அவசியத்தன்மை.	கவனம் செலுத்தப்பட்டு ஊடகவியலாளர்களுக்கு நன்னெறிக் கோவையொன்றை தயார் செய்யும் பணிக்காக சிறுவர்களில் தாக்கம் செலுத்துகின்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு திணைக்களத்தின் தலையீட்டின் மூலம் தேசிய சிறுவர் சபையின் பிரேரணைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மேற்படி கல்விமான்கள் குழுவின் உறுப்பினர் ஒருவராக செயற்பட்டு வருகின்றது. • மேலும் இது தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினாலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இணைப்பு 01)
08. தேசிய மட்டத்தில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் அலுவல்கள் திணைக்களங்களுக்கு இடையே காணப்படுகின்ற நிறுவன ஒழுங்கமைப்புடன் பரஸ்பரம் இணைந்து செயற்படுத்தல். <u>அவதானிப்பு/சிபாரிசு/கட்டளை</u> மேலுள்ள அலுவலர்கள் முறையாக பிரதேச மட்டத்தில், மாவட்ட மட்டத்தில், மாகாண மட்டத்தில் சிறுவர் தொடர்பான சிக்கல்கள்/ முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கி இறுதியில் தேசிய மட்டத்திற்கு வரும் போது ஒட்டுமொத்த செயன்முறையும் சரியான முறையில் மேற்கொள்ளக்கூடியவாறான	நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய செயற்குழுவில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளதனால் நிறுவன ரீதியாக ஒன்றிணைதல் மற்றும் ஒருங்கிணைப்பும் அதில் இடம்பெறுகின்றது. 2023 யூலை 04 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுவின் கட்டளைக்கு அமைய 2023ஆண்டு மாகாண மற்றும் மாவட்ட செயற்குழுக்களை நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டு முறையாக குழுக்களை நடாத்துவமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இக்குழுக்களை நடாத்துவதற்கான நிகழ்ச்சிநிரல் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் 2018.01.10 ஆம் திகதிய 01/18 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், இது பற்றி மாகாணக் குழுக்களும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளதுடன், அதற்கமைய குழுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

வேலைத்திட்டமொன்றை தயார் செய்துஅதனை கண்காணிப்புச் செய்யும் முறையியலை ஏற்படுத்த வேண்டும் என்பது.	குழந்தைகள் உரிமைகளுக்கான தேசியக் குழுவில் உள்ள சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஈடுபட்டு, தேசிய அளவில் முன்வைக்கப்படும் பிரச்சனைகள் தொடர்பான திருத்த வேலைத்திட்டம் மற்றும் கொள்கைகள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டு அவற்றை செயல்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கட்சிகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த கடிதம் அனுப்பப்படுகின்றது. இது தொடர்பான பின்னூட்டல் சிறுவர்கள் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகிறது, மேலும் தேசிய குழு கூட்டத்தில் தொடர்புடைய முன்னேற்றம் பின்பற்றப்படும்
09. தேசிய சிறுவர் பாதுகர்பபு அதிகாரசபையின் தரவு முறைமை	PCC/2/2/10ஆம் இலக்க 2023.11.13 ஆம் திகதிய கடிதம் மூலம் தரவு முறைமை பற்றிய அறிக்கை அரசாங்க கணக்குகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய முன்னேற்றம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கை இணைப்பு 2 மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சரோஜா சாவித்திரி போல்ராஜ்

Hon. Minister of Women and Child A...
Ministry of Women and Child Affairs
6th Floor, Sethsiripaya, 2nd Stage,
Battaramulla

கௌரவ அமைச்சர்

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு